# KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE

(Autonomous)

Coimbatore – 641 029

Estd 1973

## Extension and Outreach Programs Conducted in Collaboration with Industry, Community and Non - Government Organisations

## Academic Year 2015-2016

| Name of the Activity | King Kids Orphanage Visit |
|---|---|
| Organising Unit/ Agency/ Collaborating Agency | King Kids Orphanage, Ondipudur. |
| Number of Students participated | 190 |


**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
(நட்சத்திரத் தகுதி (டிபிடி),
(பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆற்றல்சால் தனித்தகுதி பெற்றது (யூஜிசி))
(தேசிய மதிப்பீடு, மீள் தர நிர்ணயக் குழுவின் 'A' தகுதி (91%) பெற்றது)
கோயம்புத்தூர் – 641 029.


## நாட்டு நலப்பணித் திட்டம்

**(அலகுகள் - IV, V)**

## அறிக்கை

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் - IV & V சார்பில் 12.09.2015, சனிக்கிழமையன்று ஒண்டிப்புதூரில் உள்ள கிங் கிட்ஸ் அனாதை இல்லத்திற்கு நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்களை அழைத்துச் சென்று வந்தது குறித்த அறிக்கை.**

01.09.2015 அன்று அனாதை இல்லத்திற்கு மாணவ-மாணவியரை அழைத்துச் செல்லுதல் மற்றும் தொகை வசூலித்தல் தொடர்பாக முதல்வர் மற்றும் சுயநிதிப்புல முதன்மையர் ஆகியோரிடம் முன் அனுமதிப் பெறப்பட்டது. அதனடிப்படையில் மாணவர்களிடம் அவர்களால் கொடுக்க முடிந்த அல்லது அவர்களாகவே முன்வந்து கொடுக்கின்ற தொகைகள் மட்டும் வசூலிக்கப்பட்டன. அவ்வகையில் மொத்தம் ரூ.14,366.00/- வசூலானது. வகுப்பு வாரியாக வசூலான தொகை பற்றிய விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில் அமைந்துள்ள அனாதை இல்லங்களின் நிலைப்பாடுகள் மற்றும் தேவைகள் குறித்து 10.09.2015 அன்று மாணவர்களை அனுப்பி விபரங்கள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் மாணவ-மாணவியரையும் கலந்தாலோசித்து ஒண்டிப்புதூரில் அமைந்துள்ள **கிங் கிட்ஸ் அனாதை** இல்லத்திற்குச் செல்வது என முடிவு செய்யப்பட்டது.

11.09.2015 அன்று வசூலிக்கப்பட்ட தொகையில் இருந்து அனாதை இல்லத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் ரூ.10,306.50/-க்கும், காய்கறிகள் ரூ. 900.00/-க்கும், பேனா, பென்சில் உள்ளிட்ட ஸ்டேசனரிப் பொருட்கள் ரூ.1600.00/-க்கும், விளையாட்டுச் சாமான்கள் முதலான இதரப் பொருட்கள் ரூ.3,219.50/-க்கும் வாங்கி வரப்பட்டது. மேலும் அனாதை இல்லங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவும், அனாதை இல்லங்களுக்குப் பொருட்கள் வாங்கி வருதல் என்ற வகையில் எரிபொருள், வண்டி வாடகை என ரூ.540.00/-யும், அருகிலுள்ள அரசுப் பள்ளியில் ஆங்கில வழியில் பயின்றுவரும் மாணவி ஒருவரின் கல்விக்கட்டணத்திற்காக ரூ.300.00/-யும் வழங்கப்பட்டது. ஆக மொத்தம் ரூ.16,866.00/- செலவாகியது. இதற்கான பற்றுச்சீட்டுகள் (Bills) இணைக்கப்பட்டுள்ளன.

12.09.2015, சனிக்கிழமையன்று அனாதை இல்லத்திற்கு வருகை தர விருப்பம் தெரிவித்திருந்த 190 மாணவ-மாணவியரும் காலை 9.30 மணியளவில் கல்லூரி வளாகத்திற்குள் ஒன்றுகூடினர். பின்பு நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் க. பழனிவேல் மற்றும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ந. இரஞ்சன் ஆகியோரின் வழிநடத்துதலில் அனைவரும் பேருந்தில் ஒண்டிப்புதூருக்குப் புறப்பட்டனர். காலை 11.20 மணியளவில் அனைத்து மாணவ-மாணவியரும் அனாதை இல்லம் வந்தடைந்தனர். 11.30 வரை அனாதை இல்லத்தின் அமைப்பினையும் சுற்றுச்சூழலையும் கண்டும், கேட்டும் அறிந்து கொண்டனர்.

அனாதை இல்லத்தில் விடுதிகள் ஆண்களுக்குத் தனி விடுதியாகவும் பெண்களுக்குத் தனி விடுதியாகவும் அமைக்கப்பட்டிருந்தன. விடுதிக் காப்பாளர்களாக ஆண்களுக்கு 3 பேரும், பெண்களுக்கு 4 பேரும் என 7 பேர் பணியாற்றி வருகின்றனர். அனாதை இல்லத்தில் ஆண்கள் 65 பேர், பெண்கள் 45 பேர் என மொத்தம் 110 பேர் உள்ளனர். இவர்கள் அனைவரும் 16 வயதிற்குட்பட்டவர்களாகவே உள்ளனர்.

11.30 மணியிலிருந்து 12.50 மணிவரை பெண் பிள்ளைகளோடு மாணவியரும், ஆண் பிள்ளைகளோடு மாணவர்களும் கலந்துரையாடி அவர்களுடைய குடும்பச்சூழல், கல்வி, வாழ்க்கைச்சூழல் போன்றவற்றைக் கேட்டறிந்தனர். மனதளவில் கவலையுற்றிருந்த சிலருக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கினர். பின்னர் 12.50 மணியிலிருந்து 01.40 மணிவரை அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் முகமாக ஆடல் - பாடல் நிகழ்ச்சிகளை நடத்தினர்.

பின்பு உணவு கூடத்தில் அனைவரும் ஒன்றுகூடி கூட்டுப் பிரார்த்தனை செய்தனர். அதனைத் தொடர்ந்து அனாதை இல்லத்தைச் சார்ந்த ஆண்பிள்ளைகள் வரிசையாக அமர்த்தப்பட்டு அவர்களுக்கு நமது மாணவர்களைக் கொண்டு உணவு பரிமாறப்பட்டது. பின்பு அவர்களோடு சேர்ந்து அமர்ந்து அவர்களும் மதிய உணவு உண்டனர். பின்பு பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்த்தப்பட்டு அவர்களோடு மாணவியர்களும் அமர்ந்து வரிசையாக உணவு உண்டனர். உணவு உண்ட பின் அவர்களோடு சற்றுநேரம் பேசிவிட்டு நிழற்படம் எடுத்துக்கொண்டனர்.

பிற்பகல் 03.00 மணியளவில் அனாதை இல்லத்தைச் சார்ந்த ஆண் - பெண் குழந்தைகளுக்குத் தனித்தனியே விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டன. ஓட்டப்பந்தயம், குவளையில் தண்ணீர் நிரப்புதல், ஊசி நூல் கோர்த்தல், பந்தடித்தல், பாட்டுப் போட்டி, நடனப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை நடத்தினர். இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கையேடு, பேனா, பென்சில், மட்டைப்பந்து, விளையாட்டு மட்டை, வண்ணம் தீட்டும் கருவிகள் உள்ளிட்டவை பரிசுகளாக வழங்கப்பட்டன. கூடவே மாணவ-மாணவியர் தங்கள் வீடுகளிலிருந்து கொண்டு வந்திருந்த துணிகள், விளையாட்டுப் பொம்மைகள், பாட நூல்கள், சிறுகதை நூல்கள் ஆகியவற்றை மற்றவர்களுக்கும் வழங்கினர். பின்னர் விடுதிக் காப்பாளர்கள், அனாதை இல்லக் குழந்தைகளோடு குழுவாக நிழற்படம் எடுத்துக் கொண்டனர். மாலை 04.40 மணியளவில் அங்கிருந்து அனைத்து மாணவ-மாணவியரும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிறைவாக விடுதி மாணவ-மாணவியரோடு பேராசிரியர்கள் கல்லூரிக்கு 5.30 மணியளவில் வந்தடைந்தனர்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்

இணைப்பு:-

1. வகுப்புவாரியாக வசூலான தொகைள் பற்றிய விபரம்.
2. செலவுத் தொகைக்கான பற்றுச்சீட்டுகள்.

 

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

**English Translation:**

## Orphanage Visit Report

The NSS Units 4 & 5 of Kongunadu Arts and Science College, planned to visit King Kids Orphanage, Ondipudhur on 12.09.2015. Regarding this they have meeting on 01.09.2015, the unit met and got permission from College Principal and College Dean. Regarding this visit they collected money from all the college students, finally they collected Rs 14,366.00/-.

Based on the information gathered by the NSS students on 10.09.2015, College NSS Unit 4 & 5 decided to visit King Kids Orphanage, Ondipudhur. From the amount they have purchased Grocery for Rs 10,306.50/-, Vegetables for 900.00/-, Stationeries for 3,219.50/-, Sports Material for3,219.50/-. The travelling expense charges come around Rs 540.00/- NSS sponsored Rs 300 for the students who is studying English medium for their educational expenses. Totally Rs 16,866.00/- has been spend on this visit.

On Saturday, 12.09.2015there were 190 students who had expressed their wish to visit the orphanage. On the direction of NSS Programme Officers Dr. K. Palanivel and Dr. N. Ranjan the students gathered in the college campus on morning 9.30 and they reached the orphanage by 11.20 by bus.

The Orphanage has been enriched by separate room for boys and girls. Boys hostel have three members as their wardens and for girls hostel they have four wardens. Totally the count of the students were 65 boys and 45 girls, everyone was under the age of 16. The girl NSS volunteers mingled with girl students and played with them. Some of the students were given counseling by our students.

In the afternoon everyone gathered in the lunch hall, they start the lunch with prayer. After that food were served to boys and girls separately. Completing the lunch group photos was taken. In the evening sports activities were arranged for students, the events like running race, cricket, dance, singing, and oratorical competition was arranged. The winners and runners were treated with gifts like cricket bat, ball, basket ball, volley ball, pencil, pen, color pencil and sketches. The NSS volunteers gave the things which they brought from their house. Finally the group photo was taken. The group was started from the orphanage by evening 4 pm and they reached their house by 5.30 pm.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

| | |
|---|---|
| Name of the Activity | Child Labour Abolish Awareness Programme for NSS Volunteers |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | TN NCLP Project, Coimbatore |
| Number of Students participated | 250 |

## பத்திரிகைச் செய்தி

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகுகள் - IV & V சார்பில் **"குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் மாணவர்களின் பங்களிப்பு"** எனும் பொருண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் **09.12.2015, புதன்கிழமையன்று** கல்லூரிக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்குக் கல்லூரி முதல்வர் **முனைவர் த. முரளீஸ்வரி** அவர்கள் முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதன்மை நிர்வாக அதிகாரி **முனைவர் வி. சின்னுச்சாமி** அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராகத் தேசிய குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தின் கோவை மாவட்ட இயக்குநர் **திரு. டி. வி. விஜயகுமார்** அவர்கள் கலந்து கொண்டார். அவர் தமது சிறப்புரையில், 'குழந்தைத் தொழிலாளர் முறை என்பது வறுமையின் காரணமாகவும், லாப நோக்கத்தின் காரணமாகவும் இன்றும் ஒருசில இடங்களில் இருந்து கொண்டுதான் வருகின்றது. இதனை ஒழிப்பதற்கு அரசு சட்டங்கள் இயற்றி நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தாலும், இளைய தலைமுறையினரும் இணைந்து செயலாற்றும் போதுதான் இதனை முற்றிலுமாக ஒழிக்க முடியும். குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் மாணவர்களின் பங்களிப்பு என்பது மிகமிக தேவையான ஒன்றாக உள்ளது. தாங்கள் வசிக்கும் பகுதியில் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டால் உடனடியாக 1098 என்ற எண்ணிற்கோ அல்லது எங்களைப் போன்ற அதிகாரிகளையோ தொடர்பு புகார் தெரிவிக்கலாம். குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதிகளுக்குச் சென்று புள்ளிவிபரங்களைச் சேகரித்து வரலாம். ஏழ்மையில் வசிப்பவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்குச் சென்று இலவசமாக பாடங்களைச் சொல்லித் தரலாம். தங்களால் இயன்ற அளவிற்கு பாடபுத்தகங்களையோ, நோட்டுகளையோ, பேனா – பென்சில் உள்ளிட்ட பொருட்களையோ வாங்கித் தரலாம். பொதுமக்களிடத்து குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம். இதுபோன்ற செயல்பாடுகளில் இளைய தலைமுறையினரும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்களும் முழுமூச்சாகச் செயலாற்றும் போது குழந்தைத் தொழிலாளர் இல்லாத தேசமாக இந்தியாவை உருவாக்கலாம்' என்று எடுத்துரைத்தார்.

முன்னதாக முன்னதாகத் தலைமையுரையாற்றிய கல்லூரியின் முதன்மை நிர்வாக அதிகாரி **முனைவர் வி. சின்னுச்சாமி** அவர்கள், உலக நாடுகளில் குறிப்பாக தென் அமெரிக்க கண்டத்திலும், ஆப்பிரிக்கா கண்டத்திலும் உள்ள நாடுகளில் மிகுதியாகக் குழந்தைத் தொழிலாளர் முறை உள்ளது. அதேபோன்று இந்தியாவில் பீகாரிலும் குறிப்பாக ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கல்குவாரிகளிலும் பலர் குழந்தைத் தொழிலாளர்களாகப் பணி செய்து வருகின்றனர். குழந்தைத் தொழிலாளர் முறை என்பது குற்றமாகும். எனவே இன்றைய மாணவர்கள் இதுபோன்ற குற்றங்களைத் தடுப்பதற்கும் எதிர்காலத்தில் உருவாகாமல் இருப்பதற்கும் இதுபோன்ற கருத்தரங்களில் பங்குகொண்டு, சேவை மனப்பான்மையோடு பணி செய்திட முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் **க. பழனிவேல்** அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் **திருமதி டி. தீபிகா** நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ்த்துறை பேராசிரியர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்டத் தொண்டர்கள் என 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் **க. பழனிவேல்**, செல்வி **டி. தீபிகா** ஆகியோர் செய்திருந்தனர்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயமுத்தூர் - 641 029.







**English Translation:**

### Awareness programme on "Child Labour Abolishment" – 09.12.2015

NSS Unit 4&5 of Kongunadu Arts and Science College organised a awareness programme on "Child Labour Abolish" in 09.12.2015, Wednesday at our college Conference Hall.

The chief guests of this programme Mr. T. V. Vijayakumar, Project Director, National Child Labour Project, Coimbatore and Tirupur Distrcit delivered the special address.

This programme was presided by College Principal, Dr. T. Muraleeshwari. Dr. K. Palanivel, NSS PO, gave welcome speech, College Principal, Dr. V. Chinnusamy, CEO felicitates the function. NSS PO Mrs. T. Deepika delivered vote of thanks. The event came to an end at 12.50 p.m with the National Anthem.

Nearly 250 participants from Various Departments and students from other Departments also attended this function. The NSS POs Dr. K. Palanivel and Mrs. T. Deepika are the organising committee of this function

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 029.

| | |
|---|---|
| Name of the Activity | Free Eye & Dental Checkup for College Professors and Staff Members |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Vasan Eye & Dental Hospital, Thudiyalur |
| Number of Students participated | 100 |

**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**

(நட்சத்திரத் தகுதி [டிபிடி]),
(பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆற்றல்சால் தனித்தகுதி பெற்றது [யூஜிசி])
(தேசிய மதிப்பீடு, மீள் தர நிர்ணயக் குழுவின் 'A' தகுதி (91%) பெற்றது)
கோயம்புத்தூர் – 641 029.

## நாட்டு நலப்பணித் திட்டம்

(அலகுகள் - IV, V)

### இலவச கண் மற்றும் பல் பரிசோதனை முகாம் குறித்த அறிக்கை

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் - IV & V மற்றும் கோவை வாஸன் கண் மற்றும் பல் மருத்துவமனையும் இணைந்து கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இலவச கண் மற்றும் பல் பரிசோதனை முகாமிற்கு ஏற்பாடு செய்திருந்தன. இம்முகாம் **22.02.2016, திங்கட்கிழமை** காலை முதல் **23.02.2016 செவ்வாய்க்கிழமை** மாலை வரை நடைபெற்றது. இம்முகாமினைக் **கல்லூரி முதல்வர் முனைவர் T. முரளீஸ்வரி** அவர்களும் **கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் V. சின்னுசாமி** அவர்களும் காலை 10.30 மணியளவில் தொடங்கி வைத்தனர்.

இம்முகாமிற்காகக் கோவை வாஸன் கண் மற்றும் பல் மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்கள் அடங்கிய குழுவினர் வந்திருந்து பரிசோதனை செய்தனர். மேலும் கண் பராமரிப்பு, பல் பராமரிப்பு, 6 மாதத்திற்கொருமுறை சோதனை செய்துகொள்ளுதல் குறித்து ஆலோசனைகள் வழங்கினர். துடியலூர் நு. டு. இயற்கை மருத்துவமனையில் இருந்து வருகை தந்திருந்த மருத்துவர் பாரதி அவர்கள் இலவச இரத்தப் பரிசோதனை செய்து, மூட்டு மற்றும் எலும்பு பராமரிப்பு குறித்த ஆலோசனை வழங்கினார். கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் என மொத்தம் 185 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இம்முகாமிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் க. பழனிவேல், வாஸன் மருத்துவமனையின் மக்கள் தொடர்பு அதிகாரிகளான திரு. பாப்புசாமி, ரமேஷ் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் செய்திருந்தனர். நிறைவாகக் குழு நிழற்படம் எடுக்கப்பட்டது.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்








KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE

**English Translation:**

NSS Unit 4&5 of Kongunadu Arts and Science College and Vasan Eye & Dental Hospital jointly organised a free check up for College Professors and Staff Members. This camp was held on 22.02.2016 Monday and 23.02.2016 Tuesday; free check up camp was inaugurated by College Principal Dr. T. Muraleeshwasri and College Chief Executive Officer Dr. V. Chinnusamy on 10.30am.

The Doctors, Nureses and Officers from Vasan hospital came to college and advised the Professors to have proper eye and dental check up at least twice in a year. Dr. Bharathi, Government Hospital Doctor, Thudialur, gave treatment to every staff members. He particularly concentrates on bones, joints and nerve system of each Professors and Staff Members. Nearly 185 Staff Members and Professors benefited by this camp.

The Public Relation Officer of Vasan Eye Care Hospital Mr. Paappusamy, thanks the organiser of this function Dr. K. Palanivel, NSS Coordinator, who planned and executed the camp in successful manner.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

| | |
|---|---|
| Name of the Activity | Blood Donation Camp |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Vasan Eye Hospital, R.S.puram, Coimbatore |
| Number of Students participated | 25 |

கோயம்புத்தூர் ஆர். எஸ். புரத்திலுள்ள வாஸன் பல் மருத்துவமனை சார்பில் 25.02.2016 அன்று இலவச இரத்த தான முகாமிற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. இம்முகாமில் கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித் திட்டம் அலகுகள் 4 மற்றும் 5ஐ சேர்ந்த 25 மாணவத் தொண்டர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கி வந்தனர். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் க. பழனிவேல் அவர்களை ஒருங்கிணைத்து அழைத்துச் சென்று வந்தார். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை வாஸன் பல்மருத்துவமனையைச் சார்ந்த ரமேஷ் செய்திருந்தார்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயமுத்தூர் - 641 029.



**English Translation:**

## Blood Donation Camp – 25.02.2016

Blood Donation Camp was Organised by Vasan Eye Hospital, R.S.Puram, Coimbatore in their hospital. In that camp 25 students of Kongunadu Arts and Science College, NSS Unit 4 & 5 students participated and donated their blood to the society and needy people. For this camp NSS Coordinator Dr. K. Palanivel, picked the students from college to hospital and after donating they were safely reached college with the help of Coordinator. This Blood Donation Camp was Organised by Mr. Ramesh from Vasan Eye Hospital, Coimbatore.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.